**டிசம்பர் - 12**

**"அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்." - நீதி 23.7.**

அசுத்தமானவைகள் நம்மில் புகுந்தால் அதன் பலனாக அதிக அளவிற்காவது அல்லது குறைந்த அளவிற்காவது நாம் கறைபடுத்தப்படுவது நம்மில் நடப்பிக்கப்படும் என்பதை உணர்ந்து அசுத்தமானவைகளை கவனமாக வடிகட்டிவிடுவதும், அவைகள் நம்முடைய இருதயங்களிலும், எண்ணங்களிலும் பிரவேசிக்காதபடி பார்த்துக்கொள்வதும், கர்த்தருடைய பிரதிஷ்டை செய்த ஜனங்களுக்குத் தகுதியாயிருக்கிறது. யாராவது எண்ணத்தை பராமரிப்பானாகில், ஒப்பிட்டுப் பார்க்கும்போது சுத்தமான வார்த்தையையும் கிரியையும் நிர்வகிக்கக் குறைவான முயற்சியே வேண்டியிருக்கும். அந்த அசுத்தம் ஒரு திசையிலிருந்தோ, மற்றொரு திசையிலிருந்தோ, அதாவது, உலகத்திலிருந்தோ, மாம்சத்திலிருந்தோ, அல்லது பிசாசிலிருந்தோ வருமானால், அதனுடைய தாக்குதல் முதலாவது மனதின் மேல் ஏற்படவேண்டும். அங்கிருந்து அதை ஒட்டிவிட்டால், ஜெயம் அடைந்தாயிற்று. அதை ஓட்டாவிட்டால், அப்போஸ்தலனாகிய யாக்கோப்பு (1.15) ல் சொல்கிற பிரகாரமாக அதன் விளைவுகள் எப்படிப்பட்டதாயிருக்கும் என்று நாம் அறிய முடியாது. பின்பு இச்சையானது (எந்த விதமான சுயநலமும் மனதில்) கர்ப்பந்தரித்துப் பாவத்தைப் பிறப்பிக்கும். (பாவமான வார்த்தைகளையும், கிரியைகளையும் உண்டு பண்ணும்) பாவம் பூரணமாகும் போது மரணத்தைப் பிறப்பிக்கும்.

**- Z 01, 325 (R 2890).**

மனதில் நினைப்பது இருதயத்தில் நினைப்பதும் இரண்டு வேறுபட்ட காரியங்கள். எல்லாவிதமான எண்ணங்களும் மனதினுள் பிரவேசிக்கின்றன. இந்த எண்ணங்களில் சில சாத்தானாலும், உலகத்தாலும், மாம்சத்தாலும் மனதினுள் செலுத்தப்படுகின்றன. சில எண்ணங்கள் நம்முடைய தேவனாலும் அவருடைய ஊழியக்காரராலும், அவருடைய ஜனங்களாலும் நமக்குத் தொடுக்கப்படுகின்றன. வெளியிலிருந்து நம்முடைய இருதயத்தில் மனதிற்குள் போடப்படுகிற இவ்விதமான எண்ணத்தில் முதல் பிரவேசத்துக்கு நாம் அவசியமாகப் பொறுப்பாளிகளாயிருக்கிறதுமல்ல. நாம் அவைகளுக்கு இடம் கொடுக்கும்போது மாத்திரமே, நம்முடைய எண்ணங்களுக்குப் பொறுப்பாளிகளாகிறோம். ஏனென்றால், இது நம்மை நம்முடைய இருதயத்தில் நினைக்கச் செய்கிறது. அதாவது, நம்முடைய பற்றுதல்களை அவைகளோடு ஒட்டிக்கொண்டு, நம்முடைய சித்தங்கள் அவைகளை பற்றிக்கொண்டு அவைகளை நம்முடையவைகளாக்குகின்றன. இப்படிப்பட்ட எண்ணங்களே நம்முடைய குணங்களை உருவாக்குகின்றன. இவைகள் அசுத்தமானவைகளும், கெட்டவைகளும், நம்பக்கூடாதவைகளாயும், கோபமுள்ளவைகளாயும், பெருமையுள்ளவையாயும், வீணானவைகளாயும், கோழையான தாயும், சோம்பலானதாயும், சண்டையை உண்டாக்குகிறவைகளாயும், கொடுமையானவைகளாயும், பேராசையுள்ளவர்களாயும், கபடமுள்ளவைகளுமாயுமிருந்தால், அதே தன்மைகளையுடைய குணத்தை அவைகள் நமக்குக் கொடுக்கும். அவைகள் சுத்தமுள்ளவைகளாயும், உயர்வானவைகளாயும், நம்பிக்கையுள்ளவைகளாயும், நீடிய பொறுமையுள்ளவைகளாயும், தாழ்மையுள்ளவைகளாயும், தைரியமுள்ளவைகளாயும், சுறுசுறுப்பானவைகளாயும், சமாதானமுள்ளவைகளாயும், உதாரணமானனவைகளாயும், உண்மையுள்ளவைகளாயும் இருந்தால், அதே தன்மையுள்ள குணங்களை அவைகள் நமக்குக் கொடுக்கும். இவ்விதமாக, நாம் வாஞ்சையுடன் வளர்க்கிற என்ணங்களைப்போலவே நாம் குணசாலிகளாவோம். **- P 35, 172.**

**ஒத்த வாக்கியங்கள் :**

**ஆதி 6.5, உபா 5.29, 6.5, 1சாமு 16.7, 1நாளா 28.9, 2நாளா 12.14, சங் 22.26, 34.18, 51.10,17, 57.7, நீதி 4.23, 15.13-15, எரே 17.1,9,10, மத் 15.19-21.**

**கோபுர வாசிப்பு : Z 13, 163 (R 5246) வினாக்கள் : இந்த வாரத்தில் நான் என் இருதயத்தைக் காத்துக் கொண்டேனா? எப்படி? ஏன்? எங்கு?**